# பதிப்புரை

பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள் மறைந்து ஓராண்டு கடந்துவிட்டபோதும் அவர் இன்னும் நம்முடன் வாழ்ந்துகொண்டிருக்கின்ற உணர்வே மிகுந்திருக்கிறது.

கலை, இலக்கியம், மதிப்பீடு, பண்பாடு, வரலாறு, தத்துவம், மானிடவியல், நாட்டுப் பண்பாட்டியல் என்று பல்வேறு துறைகளில் அவருடைய ஆக்க முறையிலான ஆய்வுகளும் முடிவுகளும் அவரை நம்மிடமிருந்து பிரிக்க முடியாத பிணைப்பை ஏற்படுத்தித் தந்திருக்கின்றன.

ஆயினும், அவருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தவர்களுக்கு அவருடைய நூல்கள் மட்டுமே இந்த இழப்பை ஈடு செய்துவிட முடியாது என்பது உண்மைதான். பல்வேறு துறைகளில் பல நூறு கட்டுரைகளைத் தந்திருப்பினும், அவர் தனிப்பட்ட உரையாடல்களிலும் விவாதங்களிலும் வெளிப்படுத்திய கருத்துக்களும் செய்திகளும் ஆய்வு முடிவுகளும் எழுதப்பட்டு வெளியானவற்றைவிடப் பல பங்கு மிகுதியானவை. இவற்றையெல்லாம் எழுத்து வடிவில் பெறுவதற்கான வாய்ப்பைத் தமிழகம் இழந்துவிட்டதுதான் வேதனையானது.

உலகின் எந்த நாட்டில் இருந்தாலும், தமிழாராய்ச்சியில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் பலர் அவரோடு தொடர்பு கொண்டு தமது ஆய்வுக்கான வழிகாட்டுதலைப் பெற்றனர். இவ்வாறு தேடிவந்த ஒவ்வொருவருக்கும் மணிக்கணக்கில்—நாள்கணக்கில் தமது பிற பணிகளை ஒதுக்கிவைத்துவிட்டு அவர் நெறிப்படுத்தும் உதவியைச் செய்திருக்கிறார்.

அவருடைய நேரடி ஆய்வு மாணவர்கள் வாழ்நாள் முழுதும் பயன் பெறும் அளவில் அவரிடமிருந்து அறிவொளி பெற்றிருக்கின்றனர்.

இவற்றுக்கெல்லாம் மேலான ஒரு மனிதனாக நின்று அவர் காட்டிய அன்பும் பற்றும் பாசமும் பழகியவர்களை நெகிழச் செய்திருக்கின்றன.

அவரோடு அறிமுகம் பெறும் வாய்ப்புப் பெற்றவர்களுக்கு இழப்பின் சுமையும் பிரிவின் வெம்மையும் தாங்கமுடியாததாக இருப்பதற்கு இதுவே அடிப்படையாகும்.

அவருடைய நினைவைப் போற்றும் வகையில் நாம் செய்ய வேண்டிய பணி அவரது படைப்புக்களை மக்களுக்குக் கிடைக்கச் செய்வதுதான்.

தமிழ்நாட்டின் வழிமரபுப்படி பேராசிரியர் நா. வா. அவர் களின் அறுபதாம் ஆண்டு மணிவிழாவினையொட்டி (1978) அவரைப் பற்றிய மலர் வெளியிடுவதற்கு அவர் மறுப்புத் தெரி வித்ததால், மாற்றாக பல்வேறு அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு ஒன்று வெளியிட முடிவு செய்யப் பட்டது. அப்போது, மக்கள் வெளியீடு நிறுவனத்தின் சார்பில் பேராசிரியர் அவர்களுடைய கட்டுரைகளில் சிலவற்றைத் தொகுத்துப் பத்து நூல்களாக வெளியிடலாம் என்ற என் விருப்பத்தை அவரிடம் தெரிவித்தேன். பேராசிரியர் அவர்கள் பல்வேறு ஏடுகளில் எழுதிய கட்டுரைகளை முழுமையாகக் கொண்ட தொகுப்பு நூல்களாக இல்லாமல், குறிப்பிட்ட சில கட்டுரைகளை மட்டுமே கொண்ட பத்து நூல்கள் வெளியிடு வதே அப்போதைய திட்டம். கட்டுரைகளும் தலைப்புகளும் இறுதி செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டன.

ஆயினும், சில பழைய ஏடுகள் கிடைக்காமையாலும் வழக்கமான வெளியீட்டுச் சிக்கல்கள் ஏற்படுத்திய தாமதத் தாலும் நான்கு நூல்கள் மட்டுமே வெளிவந்தன.

எனது ஆர்வத்தைக் குறைக்காமல் இருக்கவும் உற்சாகப் படுத்தி ஊக்குவிக்கவும் "நூல்கள் வரவேண்டும் என்பதுதான் முக்கியமே தவிர, அறுபதாம் ஆண்டில்தான் வரவேண்டும் என்பது இல்லை. எப்பொழுது வேண்டுமானாலும் வரட்டும்" என்று பேராசிரியர் அவர்கள் அடிக்கடி கூறியிருக்கிறார்.

மார்க்சீய அழகியல் (1978) நூலுக்கு எழுதிய முன்னுரையில்,

> இலக்கியம், வரலாற்று ஆராய்ச்சி, சமூகவியல் ஆராய்ச்சி ஆகியவற்றிலெல்லாம் ஆர்வம் கொண்டுள்ள டாக்டர் மே. து. ராசுகுமார் இந்நூலையும் இன்னும் ஏழெட்டு நூல்களையும் வெளியிடப்போவதாக அறிவித் துள்ளான். மகனுக்கு நன்றி சொல்வது மரபல்ல என்றா லும், மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்வது அவன் செயல் களை ஊக்குவிக்குமல்லவா?

என்னால் எவ்வளவு சுமக்க முடியுமோ அதற்குமேல் தூக்கி வைத்துக் கொள்கிறேன் என்பது அவருக்குத் தெரிந்தும், ஓர் இளைஞனைச் சோர்வடையச் செய்துவிடக்கூடாது என்பதற் காகவே இவ்வாறெல்லாம் எழுதினார்.

ஆனால், பேராசிரியர் அவர்களுடைய முழுமையான தொகுப்பினை வெளியிடவேண்டிய நிலை அடுத்துவரும் என்று நாங்கள் யாரும் நினைத்துப் பார்த்திருக்கக்கூட வாய்ப்பில்லை.

அவரது மறைவுக்குப் பிறகு அவர் எழுதிய அனைத்தையும் முழுமையான தொகுப்பாகத் துறையடிப்படையில் வெளியிடு

ஃதே பயன் தருவதாக அமையும் என்று எண்ணினேன். ஆராய்ச்சிக் குழுவினரும் அவ்வாறே கருதினர்.

பத்துத் தொகுதிகளில் பேராசிரியர் அவர்களுடைய அனைத்துக் கட்டுரைகளையும் வெளியிடுவது என்பது மாபெரும் திட்டம். பல்லாயிரக்கணக்கான பக்கங்கள் வரை இவை வரும். இருப்பினும், இன்றைய தலைமுறையின் தலை சிறந்த ஆய்வாளர் ஒருவருடைய எழுத்துக்களை உலகுக்குக் கிடைக்கச்செய்யவேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாதல்லவா?

சக்தி, சரஸ்வதி, சாந்தி, தாமரை, கலைக்கதிர் போன்ற ஏடுகளில் அவர் எழுதியவற்றைத் தொகுத்து வருகின்றோம். சில இதழ்கள் இன்னும் கிடைக்காததால் பணி நிறைவு பெற வில்லை. 1981 ஆம் ஆண்டு இறுதிக்குள் ஒரு சில தொகுதிகளை யாவது வெளியிட்டுவிடவேண்டும் என்ற நோக்கில் செயல் பட்டு வருகின்றோம்.

இதற்கிடையில் பேராசிரியர் அவர்கள் 'ஆராய்ச்சி' முதல் இதழிலும் 'தாமரை' (மலர் 2 இதழ் 7) 1960 ஜூன் இதழிலும் எழுதிய இரண்டு கட்டுரைகளை இங்கு நூலாக வெளியிடுகின் றோம். தொகுக்கும் பணி தாமதப்படுவதால் அவருடைய எழுத்துக்கள் ஆய்வாளர்களுக்குக் கிடைப்பதும் தாமதப்படு கிறது. ஆகவே தொகுப்புப் பணிக்கிடையில் சில கட்டுரை களை வெளியிடுவது தேவை என்ற எண்ணத்தில் இந்நூலை வெளியிடுகின்றோம். அடுத்து வேறு சில நூல்களும் வெளி வரலாம்.

பேராசிரியர் நா. வா. அவர்கள் மறைவுக்குப் பிறகு மக்கள் வெளியீடு சார்பில் வெளிவரும் அவருடைய முதல் நூல் இது. அவரது முன்னுரை இல்லாமலும் இது வருகிறது.

தமிழ்நாட்டின் சாதியமைப்பு சிக்கல் மிகுந்தது. பேரா சிரியர் அவர்கள் இதனைத் தமக்கே உரிய முறையில் ஆய்ந்துள் ளார். சாதியமைப்புக்களின் அடிப்படையை வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு பார்த்து, உற்பத்தி உறவுகளின் அடிப் படையில் பின்னணிகளைத் தெளிவாக்குகிறார்.

மக்கள் வெளியீடு 1975 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட போது முதல் எதிர்ப்பும் அவரிடமிருந்துதான் கிடைத்தது; முதல் ஆதரவு அளித்ததும் அவரே. ஒரு நிறுவனத்தைத் தொடங்குவதில் உள்ள சிக்கல்களை விரிவாக எழுதியதுடன் "உன்னைச் சமூக ஆய்வு அறிஞனாக, மார்க்சீயச் சிந்தனை யாளனாகப் பார்க்க விரும்புகிறேனேயன்றி, ஒரு பதிப்பாள னாக அல்ல" என்று அவர் எனக்கு மடல் எழுதினார். அவ ருக்கு நிறுவனத்தின் தேவையை வலியுறுத்தி எழுதினேன்.

அடுத்த மடலில் "தொடங்குவதற்கு முன் நன்மை, தீமைகளை விவாதிப்பது வேறு; தொடங்கிய பின் ஆதரவு தருவது வேறு" என்று குறிப்பிட்டு நான், கேட்டிருந்தபடி 'புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும்' என்ற நூலினையும் வெளியிட அனுப்பியிருந்தார். பின்னர் தொடர்ந்து பல நூல்களை வெளியிட வாய்ப்பளித்தார்.

மக்கள் வெளியீடு இன்று நிலைபெற்ற நிறுவனமாக வளர்ந்திருக்கிறது என்றால் அதற்குப் பேராசிரியர் அவர்கள் தந்த ஆதரவே முதல் அடிப்படையாக அமைந்தது என்று கூறலாம்.

ஆய்வுப் பேரறிஞர் நா. வா. அவர்கள் வாழ்நாள் முழுதும் எதற்காகப் பணி புரிந்தாரோ, எந்தக் கொள்கைகளை ஏற்றுச் செயல்பட்டாரோ அவ்வழியில் பயணம் தொடர மக்கள் வெளியீடு உறுதி கொள்கிறது. அதையே அவருக்குச் செய்யும் சிறந்த அஞ்சலியாக ஏற்கிறது.

**மே. து. ராசு குமார்**

# இரண்டாம் அச்சுக்கான பதிப்புரை

பேராசிரியர் நாவா அவர்களின் மறைவுக்குப் பின், அவர்களுடைய படைப்புக்களையெல்லாம் தொகுப்பு நூல்களாக வெளியிடவேண்டும் என்ற முனைப்புடன் பணிகளைத் தொடங்கியும், எண்ணியவாறு—எதிர்பார்த்தவாறு கடந்த பத்தொன்பது ஆண்டுகளாக இது முடிக்கப்படவில்லை. முதல் பதிப்பில் குறிப்பிட்ட நிலையே தொடர்வது வேதனை மிக்கது.

நாவா அவர்களுடைய ஆய்வு மக்கள்—மாணாக்கர் பலராக இருந்தும், அவர்கள் அனைவரும் அடிப்படை நோக்குகளில் இணைந்திருந்தும், கொள்கை—கோட்பாடுகளில் இயைந்திருந்தும் இப்பணி நிறைவேறவில்லை என்பது வெறும் இடரினால் என்றில்லாது, இழுக்காகவே கொள்ளத்தக்கது.

இந்த இயலாமைக்கான முழுப்பொறுப்பையும், ஏற்பாடுகளை முன்னின்று செய்த நான்தான் ஏற்கவேண்டும்.

இப்போது, நாவா படைப்புகள் குறித்து பிஎச்டி ஆய்வு செய்துவரும் பேரா. இரா. காமராசு அவர்கள் தொகுத்த 'நாவாவின் படைப்புகள்—நூலடைவு' என்ற ஒரு நூலினை, பாளையங்கோட்டை தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி

யில் அமைந்துள்ள 'நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்' வெளியிட்டுள்ளது. நாவா அவர்களின் படைப்புகளைத் தொகுத்து வெளியிடும் எனது முயற்சிகளில் கிடைத்த சில விவரங்களும் இந்த நூலடைவில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றாலும், இவை இன்னும் முழுமைப்படுத்தப்படவேண்டும். ஆனால், இதன்வழி தொகுப்பு நூல்களுக்கான அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது—முதல் அடி எடுத்துவைக்கப்பட்டுள்ளது என்று உறுதியாகக் கொள்ள முடியும்.

இந்தத் தொகுப்புப் பணிகள் தொடர்ந்து நடந்தாலும், நாவா அவர்களின் சில நூல்களை இன்றைய ஆய்வாளர்களின் உடனடிப் பார்வைக்காக மீண்டும் வெளியிட முடிவு செய்திருக்கிறோம்.

அந்த அளவில், இந்த மறுஅச்சுப் பணிகளை விரைவுபடுத்த மக்கள் வெளியீடு உரிமையாளர் ரா. வசந்தா அவர்கள் முழுமையாக ஏற்பளித்துள்ளார். நாங்கள் ஒருவருக்கொருவர் வாழ்க்கைத் துணையாக மட்டுமன்றி, ஆய்வுத்துணையாகவும் அமைந்திருக்கிறோம் என்பதையும் இங்குக் குறிப்பிடவேண்டும்.

மக்கள் வெளியீட்டின் வழக்கமான நோக்கங்களுடனும், அண்மைக் கால வழக்கத்துக்கு முற்றிலும் மாறான விரைவுடனும் இனிப் பணிகள் செழுமையுறும் என உறுதிகூறுகின்றோம்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள இரண்டு கட்டுரைகளும் இன்றைய நிலைமைகளில் சாதிகள் பற்றிய அடிப்படையான புரிதல்களுக்குத் துணையாகும் என்பதில் ஐயமில்லை. தங்களது உண்மையான விடுதலைக்கு யாரைத் தம்முடன் இணைத்துக் கொள்ளவேண்டும், யாருடன் முரண்பட்டு நிற்கவேண்டும் என்பதைத் தொடர்புடைய அனைவரும் தெரிந்துகொண்டால், சமூக—பொருளாதார மாற்றங்களுக்கான போராட்ட முனை கூர்மையடையும்.

இணைந்து நிற்கவேண்டியவர்கள், பிணக்குக் கொண்டிருப்பதால், இழப்புகள் இரு சாராருக்குமே. இத்தகைய சூழல்களைத் திட்டமிட்டுச் சில தன்னலக் குழுக்கள் உருவாக்கி வருவதையும் நினைவில் கொள்ளவேண்டும். இவற்றின் பின்னணியினைக் கொள்கை அளவில் மிக நுணுக்கமாக—தெளிவாக நாவா அவர்கள் விளக்கியுள்ளார்கள். இன்றைய தமிழகத்தின் உண்மைகளை அப்படியே மனதில் வைத்து எழுதப்பட்டது போன்றே இவை அமைந்துள்ளமையும் நோக்கத்தக்கது.

**27-02-1999** **மே.து.ரா.**

விஸ்வப்பிரம்ம வம்மிசத்தாரை சுபாசுபங்களைக்
குறித்து வேத விதிப்படி செய்வதை விப்பிராள்
தடங்கல் செய்ய கூடாதென்று

## சித்தூர் ஜில்லா
## அதலாத்துக் கோர்ட்டுத் தீர்ப்பு

1814ஆம் வருஷத்திய அசலுக்குச் சரியான நகல்.
அசல் நம்பர் 205, 1818இல் தீர்ப்பு.

### வாதிகள்

சதுர்ப்பேரியிலிருக்கும்
வெள்ளை ஆசாரியார்
மார்க்கசகாயம் ஆசாரியார்
ருத்திர ஆசாரியார்
வெங்கிடாசல ஆசாரியார்
நல்லா ஆசாரியார்
குழந்தை ஆசாரியார்
சின்னக்கண்ணு ஆசாரியார்
அருணாசல ஆசாரியார்
மகாதேவ ஸ்தபதியார்
தக்ஷிணாமூர்த்தி ஸ்தபதியார்
வரத ஆச்சாரியார்

வக்கீல்—அப்துல் சாயபு

வாதிகள் பக்கம் தஸ்தாவேசுகள் வேதசாத்திரங்கள் விபரம் உள்நம்பர் 1இல்

a) எசுர் வேதம்
b) புருஷசூக்தம்
c) மூலஸ்தம்பம்
d) வச்சிரசூசி
e) வேமநபத்யம்
f) கபிலரகவல்
g) ஜில்லா மாஜிஸ்டிரேட்டீடைரி தாக்கல்.

### பிரதிவாதிகள்

சதுர்ப்பேரியிலிருக்கும்
பஞ்சாங்கக் குண்டையன்
அருணாசல ஐயன்
வெங்கடசுப்பு சாஸ்திரி
விஸ்வதி சாஸ்திரி

# தமிழ் மன்னரும் சாதிப் பிரிவினைகளும்

சோழ மன்னர்கள் காலத்தில் இரண்டு வகையான சாதிப் பிரிவினைகளைப் பற்றிக் கல்வெட்டுகள் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம். முதல் ராசராசன் காலத்தில் 'வலங்கை பழம் படைகளிலார், பெருந்தனத்து வலங்கைப் பெரும் படைகள், அழகிய சோழத் தெரிந்த வலங்கை வேளைகாரப் படைகள், ராஜராஜன் தெரிந்த வலங்கை வேளைக்காரர்' என்ற படைப் பிரிவுகளின் பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

ராசராசன் காலத்திற்குப் பிற்பட்ட கல்வெட்டுகளில், இடங்கை தொண்ணூற்றாறு, இடங்கைத் தொண்ணூற்று சமயத் தொடகை என்ற பெயர்கள் காணப்படுகின்றன. பிற் காலச் சோழர்கள் சிலரது கல்வெட்டுக்களில், மூன்றுகை மகா சேனை, மூன்றுகை திருவேளைக்காரர் என்ற பெயர்கள் காணப்படுகின்றன. இம்மூன்று பிரிவினரும் சாதி அடிப்படை யில் அமைந்த பிரிவினரா, அன்றி வர்க்க அமைப்பில் எழுந்த பிரிவினரா என்ற வினா எழுகிறது. இவ்வினாவிற்கு விடை கூற இம்மூன்று பிரிவுகளிலும் எந்தெந்தச் சாதியினர் அடங்கி யிருந்தனர், அவர்கள் எத்தொழில்களைச் செய்து வந்தனர் என்பதையும் அவர்களிடையே நிலவிய உறவையும் அறிந்து கொள்வது அவசியமாகும்.

வலங்கைப் பிரிவில் நிலம் உடையாரும் உழவர்களும் வண்ணான், நாவிதன் போன்ற தொழிலாளிகளும் பனைமர மேறும் தொழிலாளிகளும் வன்னியர் போன்ற தொழிலாளி களும் இடையர் போன்ற கால்நடை பராமரிப்பவரும் அடங்கி யிருந்தனர். தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் தெலுங்கும் கன்னடமும் வழங்கும் நாடுகளிலும் இப்பிரிவினர் உள்ளனர். இப்பிரிவிலுள்ள சாதிகளில் சிலவற்றை ஜார்ஜ் கோல்மன் என்னும் நீதிபதி 1809ஆம் ஆண்டில் தாமளித்த தீர்ப்பொன்றில் குறிப்பிடுகிறார். அவையாவன: குசவன், மேளக்காரன், சாணான், அம்பட்டன், கன்னான், இடையன், வெள்ளாளன், பறையன், குறவன், ஒட்டன், இருளன், வேடன், வேட்டுவன் முதலியன.

கல்வெட்டுக்களிலும் செப்புப் பட்டயங்களிலும் காணப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலேயே, சற்றேறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் அவர் தமது தீர்ப்பால் இம்முடிவுக்கு வந்திருக்கிறார். இந்தச் சான்றுகளனைத்தும் நிலமுடையவர்களையும் நிலத்தில் பயிர் செய்யும் வகுப்பினரையும் அவர்களுக்கு ஊழியம் செய்யும் வகுப்பினரையும் குறிப்பிடுவதைக் காணலாம்.

இடங்கைப் பிரிவில் அடங்கியுள்ள சாதியில் தொண்ணூற்றாறு என்றும் தொண்ணூற்றெட்டு என்றும் நிகழ்ச்சிகள் குறிப்பிடுகின்றன. வீரராசேந்திர சோழனது திருவெண்காட்டுக் கல்வெட்டு ஒன்று இடங்கைச் சாதியினரிடமிருந்து, மன்னன் கொண்ட வரியைக் கோயிலுக்கு அளித்ததாகக் கூறுகிறது. அக்கல்வெட்டில் இடங்கைப் பிரிவில் அடங்கியுள்ள சாதிகள் சிலவற்றின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. அவற்றைக் கவனிக்கும்பொழுது, அவை வணிகம் செய்வோரையும் தச்சன், கருமான் போன்ற தொழிலாளரையும் குறிப்பிடுகின்றன. தர்ஸ்டன் என்னும் ஆராய்ச்சியாளர் கீழ்வரும் சாதிகளை இடங்கைச் சாதிகளென்று குறிப்பிடுகிறார். அவைகளாவன: செட்டி, வாணியன், தேவாங்கன், கொத்தன், தட்டான், கன்னான், கொல்லன், சக்கிலியன் முதலானவையாகும்.

மூன்றுகை மகா சேனையைப் பற்றி இத்தகைய விவரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. சாதிப் பிரிவுகளோடு அப்படைக்குத் தொடர்பு இருந்திருக்கும் என்று எண்ணுவதற்குச் சான்றுகள் இல்லை. இடங்கை, வலங்கை இவ்விரண்டு பிரிவிலும் அடங்காது மூன்றாம் பிரிவினர் ஆகிய அனைவரையும் கொண்ட மன்னனது நிலைப்படையாக இதனைக் கருதலாம்.

ஆகவே, இக்கட்டுரையில் சாதிகளோடு தொடர்புடைய வலங்கை, இடங்கைப் பிரிவுகளுக்கும் மன்னர் ஆட்சிக்கும் இடையே இருந்த தொடர்புகளை மட்டும் விளக்குவோம். அதுவே மேற்குறித்த வினாக்களுக்கு விடையுமாகும்.

சோழர் ஆட்சி, முக்கியமாக நிலவுடைமைச் சுரண்டலை அடித்தளமாகக் கொண்டு நிலைத்திருந்தது என்று சென்ற கட்டுரையில் பார்த்தோம்.* இச்சுரண்டலை நிலைநிறுத்திக் கொள்ள அவர்கள் உள்நாட்டில் ஒரு சமூகத் தளத்தை நிறுவிக்

* 'தாமரை' மலர் 2 இதழ் 5 (ஏப்ரல் 1960)இல் 'சோழர் ஆட்சியில் அறப்போர்கள்' என்ற தலைப்பில் தாம் எழுதிய கட்டுரையைப் பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள் இங்குக் குறிப்பிடுகிறார். —பொதுப் பதிப்பாசிரியர்

கொள்ள அவசியமாயிருந்தது. உள்நாட்டில் அஸ்திவாரமில்லாமல் மக்களைச் சுரண்டுவதும் வெளிநாட்டுப் போர்களை நடத்துவதும் சாத்தியமல்ல. ஆகவே, ஒவ்வொரு காலத்தில் சிற்சில சலுகைகளைக் கொடுப்பதின் மூலம் ஒவ்வொரு பிரிவினரைத் தங்களோடு சேர்த்துக் கொண்டார்கள்.

முதன்முதலில் நிலவுடைமைக்குப் பங்கம் வராமலிருக்கப் பெரும் பகுதி நிலங்களைக் கோயில்களுக்கு எழுதிவைத்து, அதன் மேற்பார்வையை நிலவுடைமையாளர்களுக்கு விட்டனர். ஊரிலுள்ள நிலவுடைமையாளர்களில் எந்தச் சாதியினர் அதிகமோ, அவர்களே ஊர்ச்சபையாகவும் மகாசபையாகவும் இருந்து, கோவில் நிலங்களை மேற்பார்வை செய்து வந்தனர். அரசர்களின் சமூகத் தளங்களில் இவ்வமைப்பு மிகவும் முக்கியமானது. ஆனால், நிலவுடைமையாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. நிலத்தில் பாடுபடுபவர்களது ஆதரவைப் பெறுவதற்காக அவர்களுக்கும் சில சலுகைகள் வழங்கப்பட்டன. நிலத்தில் பாடுபடாத வண்ணான், அம்பட்டன், மேளக்காரன் முதலியவர்களுக்கும் சில சலுகைகள் வழங்கப்பட்டன. ஆனால், நில உடமைச் சுரண்டல் கொடுமையாக இருந்தது என்பதை அக்காலத்தில் நடந்த அறப்போர்கள் காட்டுகின்றன.

இவ்வாறு நிலவுடைமையாளர்களுக்கும் பயிர் செய்பவர்களுக்கும் அளிக்கப்பட்ட சலுகைகள் மூலம் அரசாங்கம் இழந்த வருமானத்தை, வணிகர்களுக்கும் அவர்களைச் சார்ந்திருக்கும் தொழிலாளர்களுக்கும் புதிய வரிகளை விதித்துச் சரிக்கட்டிக் கொண்டனர்.

எடுத்துக்காட்டாகத் தமிழ் நாட்டில் இருந்து பெருவாரியான ஏற்றுமதியாக முத்து, தந்தம், பவளம், பாக்கு, சந்தனக் கட்டை, ஏலம், பளிங்குக் கல், துணி, பட்டு முதலிய வணிகப் பொருள்களுக்கு ராசராசன் காலத்திலிருந்து, சுங்கம் வசூலிக்கப்பட்டது. அக்காலத்தில் வணிகக் குழுக்களாக இருந்த வளஞ்சியம், மணிக்கிராமம், நானாதேசி, நகரத்தார் முதலியவற்றிலிருந்து சுங்கம் வசூலிக்கப்பட்டது. வணிகர்களுக்கும் கைத்தொழிலாளர்களுக்கும் விதிக்கப்பட்ட பல வரிகளைப் பற்றிப் பல கல்வெட்டுகள் கூறுகின்றன. எகவை, உகவை, ஒட்டச்சு, பாய், தறி, இறை, தட்டாரப் பாட்டம் முதலியவை இத்தகைய வரிகள்.

வணிகம் வளர்ந்தோங்கிய காலத்தில் வணிகக் குழுக்கள் செல்வாக்குப் பெற்றன. வணிகத்தை மேலும் பெருக்குவதற்கு இவ்வரிகளை நீக்கவேண்டியது அவசியம் என்று அவை உணர்ந்தன. வரிகளை நீக்குவதற்காகக் கிளர்ச்சி செய்வதற்கு இக்

குழுக்கள் தங்களோடு தொடர்புடைய, வணிகப் பொருள் உற்பத்தியாளர்களான கம்மாளர்களையும் அவர்கள் போன்ற கைத் தொழிலாளிகளையும் தங்களோடு இணைத்துக்கொண் டார்கள்.

இவ்வாறு நிலவுடைமை வகுப்பினரும் அவர்கள் தங்க ளோடு இணைத்துக் கொண்ட சாதியினரும் வலங்கைப் பிரி வினர் ஆனார்கள். வணிகக் குழுவினரும் அவர்கள் தங்களோடு சேர்த்துக் கொண்ட சாதியினரும் இடங்கைப் பிரிவினர் ஆனார் கள். வலங்கைப் பிரிவினர் கை வலுத்திருக்கும்போது, மன்னன் அவர்களோடு சேர்ந்துகொண்டு இடங்கைப் பிரிவினரை அடக்கு வான். இடங்கைப் பிரிவினர் கைவலுத்திருக்கும்போது, மன்னன் அவர்களுக்குச் சில சலுகைகளை அளிப்பான்.

எடுத்துக்காட்டாக, முதற் குலோத்துங்க சோழன் காலத் தில் வணிகக் குழுக்கள் இலங்கை, சுமத்ரா, ஜாவா, பர்மா முதலிய நாடுகளோடு வணிகம் செய்து பெரும் பொருள் ஈட்டிச் செல்வாக்கும் பெற்று வந்தன. பல போர்களால் மன்னனது கருவூலம் காலியாக இருந்தது. அரசன் வணிகர் மீது வரி விதித்து அவர்களது எதிர்ப்பைத் தேடிக்கொள்ள விரும்பவில்லை. ஓர் உபாயத்தைக் கையாண்டு அவர்களின் வருமானத்தைப் பெருக்கித் தனக்கும் பண வருவாய் வர வழி செய்தான். அயல்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் பொருள்கள் மீது விதிக்கப்பட்டிருந்த சுங்க வரியை அவன் நீக்கிவிட்டான். வணிகர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். அவர்களுக்கு லாபம் உயர்ந்தது. அதில் ஒரு பகுதியை அவர்கள் அரசனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தனர். அரசன் அவர்களது ஆதரவை இவ்வாறு பெற்றான். இச்செய்தி குலோத்துங்கனது கல் வெட்டுகளிலும் ஒட்டக்கூத்தர் பாடிய குலோத்துங்க சோழன் உலாவிலும் காணப்படுகிறது.

> சுங்கம் தவிர்த்து இருள் நீக்கி உலகாண்டவன்

என்பது மாநாடு கல்வெட்டு.

> புவிராச ராசமனு முதலோன் நாளில்
> தவிராத சுங்கம் தவிர்த்தோன்

என்று குலோத்துங்க சோழன் உலா கூறுகிறது.

தொழில்கள் காரணமாக இடங்கையர், வலங்கையர் நலன்களில் வேறுபாடு இருந்தது. வலங்கையினரில் பயிரிடு வோரும் இடங்கையினரில் தொழிலாளர்களும் மன்னனது சுரண்டலால் பாதிக்கப்பட்டவர்களே. இவ்விரு பகுதியினருக் கும் அரசின்மீது வெறுப்புத் தோன்றுவதுண்டு. அவர்கள்

ஒன்று சேர்ந்து மன்னனை எதிர்த்துவிடாவண்ணம் அரசர்கள் அவர்களிடையே பழமையான சுதந்திரங்கள் பற்றிய தகராறுகளை மூட்டிவிட்டுப் பெருங்கலகங்களுக்குத் தூண்டிவிட்டனர். இத்தகைய கலகங்கள் வலங்கை, இடங்கைக் கலகங்களென்றும் இவை மூட நம்பிக்கைகளால் வளர்ந்தனவென்றும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். அது உண்மையல்ல. ஆடுதுறைக் கல்வெட்டு ஒன்று இடங்கை, வலங்கைக் கலகங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அதைக் குறிப்பிட்டுக் கோயிற் சாசனங்களின் முகவுரையாசிரியர் கீழ்வருமாறு கூறியுள்ளார்:*

> கல்வெட்டும், அரசாங்க அதிகாரிகளின் உதவியுடன் வன்னியர்களும், வேளாளர், பிராமணர் முதலிய நிலச் சொந்தக்காரர்களும் சேர்ந்து இடங்கைப் பிரிவில் அடங்கிய தொண்ணூற்றாறு வகைச் சாதியினருக்கும் இழைத்த அநீதிகளைக் கூறுகிறது. இதேபோல இடங்கை வகுப்பார், அக்காலத்தில் ஏற்கவேண்டி வந்த வரிச் சுமைகளையும், தெரிவிக்கும் கல்வெட்டுக்கள் நாட்டின் பல பாகங்களிலும் கிடைக்கின்றன.

ஆகவே, இக்கலகங்களுக்குக் காரணம் சிறு சாதிப்பூசல்கள் அல்ல; நிலவுடைமையாளர்கள் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இடங்கையினருக்கு இழைத்த அநீதிகளே இக்கலகங்களுக்குக் காரணம். இடங்கையினர் வலுவற்று இருக்கும்போது அரசனும் இவ்வநீதிகளை ஆதரித்து வந்தான். அவர்கள் ஒன்றுசேர்ந்து வலுப்பெறும்பொழுது அரசன் அவர்களுக்குச் சில சலுகைகளை அளிப்பான்.

இடங்கைப் பிரிவுகளிடையே உட்பூசல்களை ஏற்படுத்த அரசனும் நிலவுடைமையாளர்களும் முயன்று வந்தனர். இம்முயற்சிகள் வெற்றியடையும்போது இடங்கை வகுப்பினர் கொடுமையாக அடக்கப்பட்டனர். அவர்கள் கொடுக்க வேண்டிய வரிகளும் கூடின. அனுபவத்தின் மூலம் ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்த இடங்கை வகுப்பினர் ஒன்றுகூடி ஒற்றுமையாக இருப்பதற்கு முடிவு செய்ததுண்டு. வாலிகண்டபுரம் கல்வெட்டு இம்முடிவுக்குச் சான்று கூறுகிறது.

> ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ராஜராஜ தேவனுக்கு யாண்டு பதினாறாவது வடகரை நாட்டு வாலிகண்ட புறத்துறையான், திருவாலீசுவரமுடைய

* தி. நா. சுப்பிரமணியன், தென்னிந்தியக் கோயில் சாசனங்கள்.
—பொது பதிப்பாசிரியர்

நாயனார் திருக்கோயிலில் இடங்கை உள்ளது சகலரும் நிறைவுற நிறைந்துக் குறைவறக்கூடி கல்வெட்டில் வெளி யாவது; பல மண்டலங்களிலும், பிராமணரும், சித்திர மேழிப் பெரிய நாட்டார், யாதவர், கொல்லத் தலைவ ரான மலையமான்களும், காயாங்குடி கண்ணுடை அந்தணரும் பரவர் குலபதபவண நாட்டாரும் பதினெண் விஷயத்தில், பாணியங்களும் பொற்கோயில் கைக்கோண ரும், இடங்கை சகலர்களும், ஒருவருக்கு வந்த நன்மை தீமை அனைவரும் அதாகவும், விலங்கினோமாகில், மாறு சாதிக்கும், கீழ்சாதிக்கும் தாழ்வு செய்தோம் ஆவோம்.

இதற்குப் பின் இக்கல்வெட்டு இம்முடிவுக்கு விரோதமாகப் போகிறவர்கள் கோயிலுக்குச் செலுத்த வேண்டிய அபராதத்தை வரையறுத்துச் சொல்கிறது.

இக்கல்வெட்டு இடங்கை வகுப்பினர் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று கூறுவதோடு வலங்கை வகுப்பைச் சேர்ந்த பெரிய நாட்டார், யாதவர், பரவர் முதலியவர்களும் ஒன்று சேர்ந்து தீமைகளை எதிர்க்க வேண்டுமெனவும் நன்மைகளைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டுமெனவும் கூறுகிறது. இடங்கை வகுப்பினருக்கும் மற்றும் இக்கல்வெட்டில் கண்ட வேறு சாதி யினருக்கும், ஒருவருக்கு வந்த நன்மை தீமைகள் எல்லோருக் கும் வந்ததாகக் கருதவேண்டும் என்ற உறுதியை இக்கல் வெட்டின் மூலம் சாதாரண மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

அரசர்கள் இருவகைச் சாதிப் பிரிவுகளையும் முட்டி மோதவிட்டுத் தங்கள் சுரண்டலை நீடிக்கச் செய்த முயற்சிகள் பன்முறை வெற்றி பெற்றன. பலவித இன்னல்களைப் பொதுவில் அனுபவித்த பிறகு, வலங்கைப் பிரிவில் உழைக்கும் சாதியினரும், தீமையை எதிர்க்கவும் நன்மையை வரவேற்க வும் ஒன்றுபடுவோம் என்று உறுதி செய்துகொண்டதைக் குறிக்கும் இக்கல்வெட்டு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது.

அபூர்வமாகக் கிடைக்கும் இச்சான்றுகளின் மூலம், இடங்கை-வலங்கைக் கலகங்கள் வெறும் சாதிக் கலகங்கள் அல்லவென்றும், வர்க்க முரண்பாடுகளின் அடிப்படையில் முரண்பட்ட நிலவுடைமை வர்க்கமும் வணிக வர்க்கமும் தம் மோடு இணைத்துக் கொண்ட மக்கட் பிரிவுகளின் கூட்டமைப்பு களே என்றும் முடிவுக்கு வரலாம். இவ்வமைப்புகளில், அடித் தட்டிலுள்ள உழைக்கும் மக்கள் இடங்கை, வலங்கை அமைப்பை விட்டு விலகி நன்மை தீமைகளில் ஒன்றுபட்டு நிற்கச் செய்த முயற்சியும் நமக்குப் புலனாகிறது.